கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.152/2012

வா.சா.1 - மகாலிங்கம்

நாள்.09.02.2026 த/பெ - தர்மர் நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) என்னுடைய வயது 60 ஆகும். நான் என்ன படித்துள்ளளேன் என்றால் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கு சொத்து என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் எனக்கு பாத்தியப்பட்டது என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் எனது தாத்தா மாயமுத்து நாடார் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார், ஒரு பாகம் எனது தாத்தா மூலம் வந்தது, மற்றொரு பாகம் எனது சித்தப்பா இசக்கி முத்து நாடார் வாரிசுகளிடம் இருந்து வந்தது.

2) இசக்கிமுத்து நாடார் வாரிசுகளிடம் இருந்து எந்த வருடம் எனது தகப்பனார் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மாயமுத்து நாடார் என்பவரிடம் இருந்து கிரையம் ஏதாவது பெறப்பட்டதா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. இவ்வழக்கில் வா.சா.ஆ.1 கிரையம் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர்த்து வேறு கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர்த்து வேறு கிரைய ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கில் வா.சா.ஆ.1 மூலம் தான் உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரிதான், இரண்டு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் எனது தகப்பனார் எந்தனை செண்டு கிரையம் வாங்கினார் என்றால் ஞாபகம் இல்லை.

3) வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் செய்யும் சமயத்தில் காலி மனையாகதான் இருந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள வீடு யாரால் கட்டப்பட்டது என்றால் நான் தான் கட்டினேன். எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால் ஞாபகம் இல்லை, வீட்டு எண் என்ன என்றால் கதவு எண்.60A, 60B ஆகும். மேற்படி வீட்டின் மின் இணைப்பு எண் என்ன என்றால் 340, 293 இதில் 340 மின் இணைப்பு கடை ஆகும். இவ்வழக்கில் 1ம் அயிட்ட சொத்து காலிமனை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.09 17:23:45 +0530

4) எனது தகப்பனார் எந்த வருடம் உயில் ஆவணம் ஏற்படுத்தினார் என்றால் 1997 ல் உயில் ஆவணம் ஏற்படுத்தினார். மேற்படி உயில் ஆவணம் வா.சா.ஆ.2 என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சிகள் யார் யார் என்றால் பெருமாள் நாடார், சிவன் பெருமாள், மகாராஜன் ஆகியோர் சாட்சிகள் ஆவார்கள். உயில் ஆவணம் எழுதும் போது நான் உடன் சென்றேனா என்றால் உடன் சென்று இருந்தேன். உயில் ஆவணம் ஏற்படுத்தும் போது ஆவணங்கள் ஏதும் வைத்து இருந்தார்களா என்றால் வைத்து இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் தான் உயில் ஆவணம் ஏற்படுத்தும் சமயம் வைத்து இருந்த ஆவணம் என்றால் சரிதான்.

5) வா.சா.ஆ.1 ன்படி 13/16 செண்டு தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிழமேல் வடதலை 1 .3/8 தட்சுமூலம் என்று தென்தலை 2. 1/2 தட்சுமூலம் என்றும் தென்வடல் 23. 1/4 தட்சுமூலம் என்றும் அளவுகள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் ஆவணத்தில் உள்ள அளவுகளுக்கும், வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள அளவுகளுக்கும் விஸ்தீரணத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் கூடுதலாக அளவுகள் மற்றும் விஸ்தீரணங்கள் குறிப்பிட்டு எழுதப்பட்டது என்றும், அதனால் அது செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

6) வா.சா.ஆ.2 ல் சொல்லப்பட்டுள்ள 1 அயிட்ட சொத்து மட்டும் தான் பிராதில் வழக்கு சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. இவ்வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் 2 அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. 1 அயிட்ட சொத்தின் சர்வே எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. 1ம் அயிட்ட சொத்தின் எல்கை விவரம் என்ன என்றால் மேல்பக்கம் தென்வடல் தெரு, கீழ்பக்கம் முத்துகுட்டி நாடார் இல்லம், வடக்கு பக்கம் ரோடு, தெற்கு கணேசன் வாத்தியார் வீடு ஆகும். நான் வடக்கு பக்கம் எல்கையாக சொல்லும் ரோடு தான் 2 ம் அயிட்ட வழக்கு சொத்து என்றால் சரிதான்.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.09 17:23:49 +0530

7) 2ம் அயிட்ட சொத்தின் நீளம், அகலம் என்வென்றால் ஞாபகம் இல்லை. 2ம் அயிட்ட சொத்து எத்தனை செண்டு என்றால் அது ரோடு ஆகும், அதனால் சொல்ல இயலாது. 2ம் அயிட்ட சொத்தை பொறுத்து உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி உள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. இவ்வழக்கு பிராது நான்கு முறை சீர்த்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2012 முதல் 2025 வரை 2ம் அயிட்ட சொத்துக்கு மூன்று பக்க எல்கைகள் தான் சொல்லப்பட்டு இருந்தது என்றாலும், 2025 ல் தாக்கல் செய்த சீர்த்திருத்த பிராதில் தான் நான்கு பக்க எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். 2ம் அயிட்ட சொத்தின் எல்கைகள் என்ன என்றால் கிழக்கு முத்துகுட்டி நாடார் இடம், வடக்கு தேசிய நெடுஞ்சாலை, மேற்கு ரோடு, தெற்கு என்னுடைய இடம், 1ம் அயிட்ட சொத்து ஆகும்.மேற்கு பக்கம் பிரதிவாதி கோவில் என பிராதில் குறிப்பிட்டுள்ளேள் என்றால் மேற்கு பக்கம் ரோடு, அதற்கு மேற்குதான் பிரதிவாதி கோவில் அமைந்துள்ளது.

8) 1ம் பிரதிவாதி கோவிலின் கிழக்கு வாசல் தான் ரோட்டை நோக்கி உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கை தாக்கல் செய்யும் சமயத்தில் நிலத்தை அளவீடு செய்தேனா என்றால் செய்யவில்லை. இவ்வழக்கு சொத்தை எப்போது அளவீடு செய்தேன் என்றால் நீதிமன்றத்தில் இருந்து அளவீடு செய்தார்கள். இவ்வழக்கு சொத்தை இரண்டு முறை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்க்கவில்லை. முதல் நீதிமன்ற ஆணையர் வழக்கறிஞர் சந்திரன் என்பவர் 2012ம் ஆண்டு அறிக்கையை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். **மேற்படி ஆணையர் அறிக்கை மற்றும் மாதிரி வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 2ம் நீதிமன்ற ஆணையர் வழக்கறிஞர் இம்மானுவேல் என்பவர் 2025ல் அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். முதல் நீதிமன்ற ஆணையர் 2012 ல் தாக்கல் செய்த அறிக்கையை மறைத்து தான் 2ம் நீதிமன்ற ஆணையர் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி 2 நீதிமன்ற ஆணையர்கள் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 நீதிமன்ற ஆணையர் அறிக்கைகளில் எதை நான் ஏற்று கொள்கிறேன் என்றால் 2வதாக தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கையை ஏற்று கொள்கிறேன். முதல் நீதிமன்ற ஆணையர்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.09 17:23:54 +0530

அறிக்கை மற்றும் வரைபடம் இருக்கும்போது அதை இரத்து செய்யாத நிலையில் 2 வது ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் ஏற்றுகொள்ளகூடியது அல்ல என்றால் சரியல்ல.

9) முதல் ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிடும் போது 2 ம் தபசிலில் கட்டுமானம் கட்டுவதற்காக தண்ணீர், சிமெண்ட், செங்கல் வைக்கப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அதை நான் வைக்கவில்லை. 2 ம் தபசில் ரோடு பகுதியில் 1 அடி உயரத்தில் நான் சிமெண்ட் தளம் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 ம் தபசில் ரோடு பகுதியில் தென்னை ஓலையால் கூரை அமைத்துள்ளேனா என்றால் அமைத்துள்ளேன், எனது கடைக்குமுன் அமைத்துள்ளேன். மேற்படி ஓலை கூரை எவ்வளவு அடி நீளம், அகல் இருக்கும் என்றால் 6 அடி நீளமும், 8 அடி அகலமும் இருக்கும். மேற்படி ஓலை கூரையின் கீழ் ஹாலோ பிளாக் சுவர் கட்டி பேஞ்ச் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல, ஆனால் 2 பெஞ்ச் அமைத்துள்ளேன்.

10) ஓலை கூரை அமைப்பதற்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் பஞ்சாயத்தில் நான் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. கோவில் கொடை விழா சமயத்தில் கிழக்கு வாசலை ஓட்டி பொங்கல் வைப்பது, கோலம் போட்டு விழாக்கள் நடத்துவார்கள் என்றால் சரியல்ல. 2 ம் அயிட்ட சொத்து பொது மக்களுக்கான ரோடு என்றால் சரிதான். கோவில் கொடை சமயத்தில் பந்தலை பிரித்து கொடுப்பேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கோவிலுக்கு 350 வரிதாரர்கள் இருப்பார்கள் என்றால் 300 வரிதார்கள் இருப்பார்கள். மேற்படி கோவில் வரிதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பொது கோவில் என்றால் சரிதான். நான் முன்னர் மேற்படி கோவிலுக்கு வரி கொடுத்து வந்தேன் என்றால் சரிதான். நான் எந்த வருடத்தில் இருந்து கோவிலுக்கு வரி கொடுப்பதில்லை என்றால் 2020 வருடத்தில் இருந்து கொடுப்பதில்லை. நான் தற்போது கிறிஸ்தவராக மதம் மாறிவிட்டேன் என்றால் சரிதான். நான் எந்த வருடம் கிருஸ்தவராக மதம் மாறினேன் என்றால் சுமார் 6 வருடங்கள் இருக்கும்.

11) வழக்கு பிராதில் 1ம் பிரதிவாதி கோவிலில் Governing committe என்ற குழு உள்ளதா என்றால் சரியாக ஞாபகம் இல்லை, ஆனால் தலைவர் முத்து கிருஷ்ணன் ஆவார். மேற்படி குழு சம்மந்தமாக ஆவணம் ஏதும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. மேற்படி Governing committe பதிவு செய்யப்பட்ட அமைப்பா என்றால் ஞாபகம் இல்லை. இவ்வழக்கு



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.09 17:23:59 +0530

பிரதிநிதித்துவ நிலையில் தாக்கல் செய்யப்படாதா காரணத்தால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி மற்றொருதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.09 17:24:02 +0530